**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts05sp042026.04
https://ngmtamil.in/

# The Commercial Dimension of Silappatikaram

**Sathish R***,
Ph.D. Research Scholar, Dept. of Indian Languages and Literary Studies, University of Delhi, Delhi -110007
*Correspondence: sathishr.phd@mil.du.ac.in , Tel: +916380014250,

**Article Info**
Received on 15-April-2026, Revised on 18-April-2026, Accepted on 20-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

This article examines the unprecedented occurrence of selecting characters with a commercial background as the protagonists in Silappatikaram, the first epic composed in the Tamil literary tradition. The paper highlights how the Jain religion, while using the epic Silappatikaram to give literary form to its philosophy, simultaneously elevates the mercantile community—which heavily supported it socially and held immense influence in contemporary society—to the prestigious position of leading the epic narrative. The commercial dimension of Silappatikaram is uncovered by analyzing the intersections that trade maintained with governance, religion, and philosophy within the epic. This study reveals how religion, philosophy, and commerce functioned in harmonious tandem within the text to ensure their respective long-term stability. Furthermore, through the references to trade in Silappatikaram, this research demonstrates how the commercial sphere effectively created Silappatikaram as its own literary representation.

***KEYWORDS:*** *Silappatikaram, Commerce/Trade, Ancient Tamil Kingdoms, Etti (a title bestowed on prominent merchants), Jainism, Theory of Karma.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# சிலப்பதிகாரத்தின் வணிகப் பரிமாணம்

***சதிஷ் ர,** முனைவர் பட்ட ஆய்வாளர், இந்திய மொழிகள் மற்றும் இலக்கிய ஆய்வுகள் துறை தில்லிப் பல்கலைக்கழகம். sathishrnbt@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

காப்பியம் எனும் இலக்கிய வகைமையில் தமிழில் முதன்முதலில் உருவானச் சிலப்பதிகாரத்தின் தலைமைக் கதை மாந்தர்களாக வணிகப் பின்புலம் கொண்டவர்களைத் தெரிவு செய்த முன்னோடியில்லாத நிகழ்வை இக்கட்டுரை ஆய்வுக்கு உட்படுத்துகிறது. சமணச் சமயம், சிலப்பதிகாரக் காப்பியத்தின் வழியாக, தனது மெய்யியலுக்கு இலக்கிய வடிவம் அளிக்கிற அதே வேளையில், சமூகத் தளத்தில் தங்களுக்கு ஆதரவு நல்குகிற, அக்காலச் சமூகத்தில் மிகுந்தச் செல்வாக்குடன் திகழ்ந்த வணிகச் சமூகத்தை, காப்பியத்திற்கு தலைமை ஏற்கிற சிறப்புக்குரியதாக உயர்த்துவதையும் ஒருசேர நிகழ்த்தியுள்ளதை இக்கட்டுரை வெளிக்கொணர்ந்துள்ளது. காப்பியத்தில் அரசு, சமயம், மெய்யியல் ஆகியவற்றுடன் வணிகம் கொண்டிருந்தத் தொடர்புகளை ஆராய்வதன் வழியாகச் சிலப்பதிகாரத்தின் வணிகப் பரிமாணம் வெளிப்படுத்தப்படவுள்ளது. சமயம், மெய்யியல், வணிகம் ஆகிய மூன்றும், தங்களது நிலைத்தன்மையை உறுதிசெய்திடும் நோக்கில், இசைவுடன் ஒருங்கேக் காப்பியத்தில் செயல்பட்டுள்ள விதத்தை இவ்வாய்வில் இருந்து அறியமுடியும். மேலும், சிலப்பதிகாரத்தில் வணிகம் பற்றிய குறிப்புகளின் வழியாக, வணிகம் தனக்கான இலக்கியப் பிரதியாகச் சிலப்பதிகாரத்தைப் படைத்துள்ளதை இவ்வாய்வு புலப்படுத்துகிறது.

**திறவுச் சொற்கள்**: சிலப்பதிகாரம், வணிகம், பண்டைய தமிழக அரசுகள், எட்டி, சமணச் சமயம், வினைக் கோட்பாடு.

**முன்னுரை**

காப்பியம் எனும் இலக்கிய வகைமை, தமிழிலக்கியத்தில் பொ.ஆ. இரண்டாம் நூற்றாண்டில்[1] பரிணமித்துள்ளது. உலகின் செம்மொழிகளில் உருவானக் காப்பியங்களுடன் ஒப்பிடும்போது, தமிழில் கிடைக்கப்பெற்றுள்ளக் காப்பியங்களில் முதற்காப்பியமானச் சிலப்பதிகாரத்தின் பாடுபொருள் தனித்துவமிக்கதாக உள்ளது. அதாவது, தமிழ் மொழியையொத்தப் பிற மொழிகளில் எழுதப்பட்ட முதற்காப்பியங்கள் அரசனையும் இறைவனையும் குறித்துப் பாடியுள்ள நிலையில், அவற்றுக்கு மாற்றாக வணிகப் பின்புலம் கொண்ட மக்களின் கதையினைக் கருப்பொருளாகக் கொண்டு இக்காப்பியம் படைக்கப்பட்டிருப்பது முன்னோடியில்லாத நிகழ்வாகும். இவ்வாறு தமிழில் முதன்முதலாக உருவாகின்ற காப்பியத்தினுடைய முதன்மைப் பாத்திரங்களாக வணிகக் குடிமக்கள் தெரிவுசெய்யப்பட்டிருப்பதும் அவர்களின் கதையினைப் பாடுபொருளாகத் தேர்ந்தெடுத்திருப்பதும் எளிதில் தவிர்த்துவிடவியலாத ஆய்வுக்குரிய விடயங்களாக உள்ளன. இவற்றை ஆய்வுக்குட்படுத்துவதன் வழியாக, இக்காப்பியம் எழுதப்பட்டக் காலத்திலான தமிழ்ச் சமூகத்தில் வணிகம் மற்றும் வணிகர்கள் வகித்தப் பங்கையும் செலுத்தியத் தாக்கத்தையும் வெளிக்கொணர்ந்திட

இயலும் எனக்கருதி இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. எனவே, இங்கு காப்பியத்தில் இடம்பெறும் வணிகம் குறித்த பதிவுகளின் ஊடாக வணிகத்துடனான அரசியல், சமயம், மெய்யியல் போன்றவற்றின் தொடர்புகள் புலப்படுத்தப்படவுள்ளன. இவ்வாறு, சிலப்பதிகாரத்தினுடைய வணிகப் பரிமாணத்தைப் வெளிப்படுத்த முயலுவதாக ஆய்வு அமைகிறது. பண்டைய இலக்கியங்களில் வணிகம் பற்றியக் குறிப்புகள் நாட்டின் வளமையை அல்லது அரசனின் புகழினை எடுத்துரைக்க உதவும் இலக்கிய உத்தியாகவும் இருந்திருக்கக்கூடும் என்பதையும் இங்கு கருத்தில் கொள்ள வேண்டும்.

**தரைவழி மற்றும் கடல்வழி வணிகங்களின் ஒருங்கிணைப்பு**

முப்புறமும் கடலால் சூழப்பட்ட பண்டைய தமிழகம், இந்தியத் துணைக்கண்டத்துடன் கொண்டிருந்த தரை வழியிலானப் பெருவழிகள் மற்றும் அயல் நாடுகளுடன் கொண்டிருந்த கடல்வழி தொடர்பும் பழந்தமிழரது வணிகத்தில் குறிப்பிடத்தக்கப் பங்காற்றியுள்ளன. இவ்வாறு, பண்டைய தமிழகத்தின் புவியியல் அமைப்பு மற்றும் இங்கு விளைந்த பொருட்களின் ஏற்றுமதி பழந்தமிழர்களின் வணிகத்தில் மிகுந்தத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. சங்க காலத்தில் வணிகம் பெரும்பாலும் பண்டமாற்று முறையில் நடந்திருந்தாலும் அதன் அடுத்தகட்ட பரிணாம வளர்ச்சியாக பொன்னாலான நாணயங்களும் பயன்பாட்டுக்கு வந்துள்ளதை அறியமுடிகிறது. இப்பொன்னாலான நாணயங்களின் வரவும் அவற்றின் வழியே மிகுதியான செல்வ வளமும் வணிகர்களில் பெரும் செல்வ வளம் கொண்ட பெருவணிகர்கள் தோன்றிட வழிவகுத்துள்ளன. நாட்டில் ஏற்கனவே ஆட்சிசெய்யும் அரசு அதன் தலைமையான அரசன் எனும் அதிகார மையம் உள்ள நிலையில், பெருவணிகர்கள் தவிர்க்க முடியாத புதிய அதிகார மையங்களாக உருவாகியுள்ளனர்.

காப்பியத்தினுடைய தொடக்கம், காப்பியத் தலைவியும் தலைவனுமான கண்ணகி மற்றும் கோவலனின் திருமணத்துடன் துவங்குகிறது. இத்திருமணம், பண்டைய தமிழர்கள் மேற்கொண்ட வணிகத்தின் இருபெரும் வடிவங்களான கடல்வழி வணிகம் மற்றும் தரைவழி வணிகம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாக உள்ளது. அதாவது, கண்ணகியின் தந்தை மாநாய்கன் எனும் சிறப்புப் பெயர் பெற்ற பெரும் வணிகர். கோவலனின் தந்தை சங்கநிதி பதுமநிதி என்கிற இரு பெரும் நிதிகளை உடைய இருநிதிக்கிழவன் எனும் சிறப்புப் பெயரையுடைய மாசாத்துவன். மாநாய்கன் எனும் சிறப்புப் பெயர், கடல்வழி வணிகத்தில் ஈடுபடும் வணிகர்களின் தலைவனுக்குரியப் பெயராகும். மாசாத்துவன் எனும் சிறப்புப் பெயர், தரைவழி வணிகத்தின் ஈடுபடும் வணிகர்களின் தலைவனுக்குரிய பெயராகும். தரைவழி வணிகத்தில் ஈடுபட்ட வணிகர்கள், வழிப்பறிக் கொள்ளைப் போன்ற இடையூறுகளிலிருந்து தங்களையும் தங்கள் உடைமைகளையும் பாதுகாப்பதன் பொருட்டு தங்களுக்குள் ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளனர். அவை 'சாத்து' என அழைக்கப்பட்டுள்ளன.

அச்சாத்துகளின் தலைவர்கள் மாசாத்துவன் எனப்பட்டனர். இவ்வாறு, பண்டைய தமிழர்கள் ஈடுபட்ட இருபெரும் வணிக வடிவங்களைச் சேர்ந்த பெரும் வணிகர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக காப்பியத்தின் தலைமை மாந்தர்கள் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர்.

தரைவழி மற்றும் கடல்வழி வணிகம் மேற்கொள்ளும் பெருவணிகர்கள் குறித்தத் தரவுகளை வழங்குகிற காப்பியம், மீன், இறைச்சி, எண்ணெய், பூக்கள் மற்றும் வெற்றிலை உள்ளிட்டவற்றை விற்கும் சிறு வணிகர்களைப் பற்றியும் தரவுகளை வழங்குகிறது. நகரில் இரவும் பகலும் பரபரப்பாக இயங்கிய வணிக மையங்களான பகல் நேர சந்தையான நாளங்காடி மற்றும் இரவு நேர சந்தையான அல்லங்காடிப் பற்றியக் குறிப்புகள் காணப்படுகின்றன. எனவே, சிறு வணிகர்கள் மற்றும் பெரும் வணிகர்கள் பற்றியும் தரைவழி மற்றும் கடல்வழி வணிகம் பற்றியுமான தகவல் களஞ்சியமாக காப்பியம் செயல்படுகிறது.

**அரசு மற்றும் வணிகம்**

சமூகத்தில் தவிர்க்க இயலாத வகையில் புதிய அதிகார மையங்களாக பெரும் வணிகர்கள் உருவாகியபோது, அவர்களிடம் பெறப்பட்ட வரிகளின்வழி நாட்டின் பொருளாதார வளத்திற்கு இவ்வணிகர்கள் பங்களிப்பதால் அரசும் அவர்களின் வளர்ச்சியை அனுமதித்துள்ளது. நாட்டின் செல்வ வளத்தை மேம்படுத்தும் மாசாத்துவன் மற்றும் மாநாய்கன் போன்ற வணிகத் தலைவர்களில் மிகுந்த பொருள் ஈட்டியவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, 'எட்டி'[2] எனும் சிறப்புப் பட்டத்தை அரசர்கள் வணிகர்களுக்கு வழங்கியுள்ளதை அடைக்கலக் காதையின்வழி அறியமுடிகிறது. மேலும், அரசனது ஆட்சி நிர்வாகத்திற்குத் துணைபுரியும் அமைப்புகளாக 'ஐம்பெருங்குழு' மற்றும் 'எண்பேராயம்' ஆகியனவற்றைப் பற்றி இந்திர விழவூரெடுத்தக் காதையில் குறிப்புகள் உள்ளன. எண்பேராயத்தில் இடம்பெற்றிருந்தவர்களாக நகரமாந்தர் உள்ளிட்டவர்களின் பட்டியலினை அடியார்க்கு நல்லார் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். இங்கு, 'நகரமாந்தர்'[3] எனப்படுவது வணிகர்களைச் சுட்டுவதாக உள்ளது என்று தொ.மு.சி. ரகுநாதன் கூறுகிறார்.

நகரமாந்தர் போன்று வணிகர்களைக் குறிக்கும் பதங்களாக, 'மன்னர் பின்னோர்'[4], 'அரைசர் பின்னோர்'[5], 'அரசர் பின்னோர்'[6] போன்றவை காப்பியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவர்களின் செல்வ நிலையினை, 'அரசனும் வியந்து, அடைந்திட விரும்பும் வண்ணம், பல நாடுகளிலிருந்து வணிகத்தின் வழியாகத் திரட்டிய செல்வ வளம் படைத்தவர்களாக வணிகர்கள் விளங்கினர்' என்கிற கூற்றிலிருந்து அறிய முடிகிறது. இத்தகைய வளம் பொருந்திய வணிகர்களுடன் ஒத்திசைவைப் பேணிட, வணிகர்களினுடையச் சில அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற அரசுகள் முன்வந்துள்ளன. அயல் நாடுகளுக்கு வணிகப் பொருட்களுடன் செல்லும்போது, வழிப்பறிக் கொள்ளைப் போன்ற இடையூறுகளை எதிர்கொள்ளும் வணிகர்கள் தங்கள் பாதுகாப்புக்குப் படை

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/kijts05sp042026 

வைத்துக்கொள்ள அரசு அனுமதித்துள்ளதையும் அரசனுக்கு மட்டுமே உரியதானப் படை வைத்துக்கொள்ளும் உரிமை வணிகர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதையும் தொல்காப்பியத்தின் மரபியல் நூற்பாக்களிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. இவ்வாறு, தொல்காப்பியக் காலத்தில் படை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்ட வணிகர்கள், சிலப்பதிகாரக் காலத்தில் அரசனுக்கு இணைவைத்து நோக்கும் வகையில், வளர்ச்சியடைந்திருந்தனர். இதனை, 'வணிகத்தால் மக்களைக் காக்கும் வணிக பூதம், ஆட்சிபுரியும் அரசன் அணியும் முடியினைத் தவிர மற்ற அனைத்து அணிகலன்களும் அணிந்திருந்தது'[7] என்பதாக அழற்படு காதையில் வணிக பூதம் குறித்த விவரிப்பிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. இத்தகையத் தரவுகள், காப்பியம் உருவாகியபோதான சமூகச் சூழலில் வணிகர்கள் எய்தியிருந்தச் செல்வாக்கினைப் புலப்படுத்துகின்றன. இவ்வாறாக, அக்காலத்தில் நிலவிய அரசு மற்றும் வணிகம் இடையேயானத் தொடர்புகளையும் ஊடாட்டங்களையும் சிலப்பதிகாரத்திலிருந்து அறிய முடிகிறது.

கதையின் அமைப்பில், ஒரு அரசால் வணிகர்களுக்கு நிகழ்ந்த அநீதிக்கு மற்றொரு அரசினால் நீதி கிடைப்பதாகக் கூறுவதன் வழியே, அரசுகளுக்கும் வணிகர்களுக்கும் இடையிலான உறவையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்த காப்பியம் முனைந்துள்ளது. காப்பியத்தில் சேர, சோழ, பாண்டிய நாடுகளை இணைக்கும் காரணியாக வணிகப் பின்புலம் கொண்ட மக்களின் கதையும் வணிகமும் இருந்துள்ளது. வணிகம் செழுமையான நிலையை அடைய வழிசெய்திடும் வகையில், இம்மூன்று அரசுகளும் முரண்பாடுகளை விடுத்து, 'தமிழ்நாடு'[8] என்ற அடையாளத்தின் கீழ் ஒன்றிணைய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

**சோழ நாட்டில் வணிகம்**

சங்க காலத்திலேயே 'பட்டினம்' என்ற சிறப்புப் பெயரில் அழைக்கப்பட்ட சோழ நாட்டுத் தலைநகரமானப் புகாரில் மேற்கொள்ளப்பட்ட வணிகச் செயல்களைப் பட்டினப்பாலை முதலிய சங்க நூல்களிலிருந்து அறியமுடிகிறது. அதன் அடுத்தக்கட்ட வளர்ச்சியடைந்த நிலையினைச் சிலப்பதிகாரத்தில் காணமுடிகிறது. புதியப் புதிய நாடுகளிலிருந்து பல்வேறு பொருட்கள் தரைவழியாகவும் கடல் வழியாகவும் கொண்டு வரப்பட்டுப் புகாரில் குவிக்கப்பட்டதால், பல நாடுகளையும் ஓரிடத்தில் காண்பதனைப் போன்ற தோற்றத்தை உருவாக்குவதாகப் புகார் நகரம் விவரிக்கப்படுகிறது. இவ்வாறு, 'பல்வேறு நாடுகளிலிருந்து புகார் துறைமுகத்தை வந்தடைந்த பலவகையான பொருட்களுக்குச் சுங்கம் வசூலித்து, சோழ அரசின் முத்திரை பதித்து நாட்டிற்குள் அனுமதித்திடும் கடுமையானக் காவல் நிறைந்த சுங்கச்சாவடி அமைப்பு குறித்தத் தரவுகள் ஐந்தாம் காதையில் இடம்பெறுகின்றன.'[9] மேலும், சோழ நாட்டைச் சேர்ந்த வணிகர்கள் அனைத்துத் திசைகளிலும் மேற்கொண்ட வணிகச் செயல்பாடுகளைப் பின்வரும் தரவுகள் குறிப்பிடுகின்றன. 'மேற்குத் திசையிலிருந்துப் பெறப்பட்ட கண்டு சருக்கரை கிழக்குத் திசையிலிருந்து வந்த அகில்

முதலியவற்றைக் கலந்து அந்தி மாலையின்போது நறுமணப் புகையை உருவாக்கியுள்ளனர். மேலும், வடதிசை மலையிலிருந்து கொண்டுவரப்பட்ட வட்டக்கல்லில் தென்திசையிலிருந்து வந்தடைந்தச் சந்தனத்தைத் தேய்த்துத் தயாரிக்கப்பட்ட சந்தனப் பசையை உடலில் பூசியுள்ளனர்.'[10] இக்கூற்றைப் பண்டைய தமிழ்நாட்டின் வணிக உறவுகளுடனும் மேற்கூறிய பொருட்கள் அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்ட பகுதிகளுடனும் தொடர்புபடுத்துகையில், மேற்கில் யவன நாட்டிலிருந்து (கிரேக்கம்) கண்டு சருக்கரையும் கிழக்கில் கழாகத்திலிருந்து (மியான்மர் நாடு) அகிலும் வடக்கே திருப்பதி மலையிலிருந்து வட்டக்கல்லும் தெற்கே பொதிகை மலையிலிருந்து சந்தனமும் சோழ நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கலாம்.

சிலப்பதிகாரத்தின் ஐந்தாவது காதையில்,[11] புகார் நகரில் பரபரப்பாக வணிகம் நடைபெற்றதைப் பல்வேறு தரவுகள் விளக்குகின்றன. சந்தையில் சிறு வணிகர்களால் பட்டிலும் பருத்தியிலும் எலிமயிரிலும் நெய்யப்பட்ட ஆடைகள், பவளம், முத்து, வண்ணக் குழம்புகள், சுண்ணாம்பு, அகில், சந்தனம், பூக்கள், தானியங்கள், பிட்டு, மீன், இறைச்சி, உப்பு, எண்ணெய் மற்றும் வெற்றிலை உள்ளிட்டப் பல்வேறு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேலும், வெண்கலம் மற்றும் செம்பினாலானப் பாத்திரங்கள் செய்வோர், மரவேலைகளில் ஈடுபடும் தச்சர்கள், ஆயுதங்களைச் செய்யும் கொல்லர்கள், பொற்கொல்லர்கள், குயவர்கள், ஓவியக் கலைஞர்கள், சிற்பிகள், தோலாலானப் பொருட்கள் செய்வோர், நெசவாளர்கள் மற்றும் அணிகலன் செய்வோர் எனப் பல்வேறு திறமையானக் கைவினைத் தொழிலாளர்களின் இருப்பு சுட்டிக்காட்டப்படுகிறது. பண்டைய தமிழ் இலக்கியங்கள் கிரேக்கம், உரோம நாடு, அரபு நாடுகள், எகிப்து, சீனம் ஆகிய நாடுகளிலிருந்து வந்த வெளிநாட்டவர்களை யவனர்கள், சோனகர்கள் என்று குறிப்பிடுகின்றன. வணிகர்களாகவும், மாலுமிகளாகவும் புகாரை வந்தடைந்த யவனர்கள் துறைமுக வீதிகளில் குடியிருந்தனர் என்பது போன்ற பல குறிப்புகள் காப்பியத்தில் கிடைக்கின்றன. இத்தரவுகள், சோழ நாட்டு வணிகர்கள் தொலைதூர அயல் நாடுகளுடன் திடமானத் தொடர்புடன் விளங்கியமையை வெளிப்படுத்துகின்றன.

**பாண்டிய நாட்டில் வணிகம்**

'கூடல்' எனும் சிறப்புப் பெயரால் விளிக்கப்படும் பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரை நகர் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் விரவிக் காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்தின் பதினான்காவது காதையான 'ஊர் காண் காதை',[12] மதுரையில் இருந்த பல்வேறு வணிக வீதிகளைப் பற்றிய நுட்பமான தரவுகளை வழங்குகிறது. அவற்றின் வழியாக அக்காலத்தில் நடைபெற்று வந்த தங்கம், நவமணிகள், தானியங்கள், உடைகள் மற்றும் பிற பயன்பாட்டுப் பொருட்களை விற்பனை செய்த வீதிகளின் அமைவிடம் மற்றும் வணிகச் செயல்பாடுகள் பற்றித் தெளிவாக அறிய முடிகிறது.

அங்காடி வீதி

மன்னர்கள் விருப்பங்கொண்டு வாங்கிச் செல்லும் படியான பல்வேறுப் பொருட்கள் நிறைந்த வீதியாக அங்காடி வீதி விவரிக்கப்படுகின்றது. மூடிய வண்டிகள், வண்டிகளின் சக்கரங்கள், தேரின் மொட்டு, கவசம், மணிகள் பதிக்கப்பட்ட அங்குசம், தோலாலான கைத்தளம், அரைப்பட்டிகை, வளைதடி, சாமரம், குத்துக்கோல்கள், செம்பு வெண்கலப் பாத்திரங்கள், சரங்கள், பல்வகை மாலைகள், தந்தத்தாலான பொருட்கள், நறுமணப் பொருட்கள், மலர் மாலைகள் மற்றும் பட்டியலிடமுடியாதபடி பல பொருட்கள் அங்காடி வீதியில் விற்கப்பட்டதாக அறியமுடிகிறது.

**நவமணிக்கடை வீதி**

நவமணிக்கடை வீதியில் கறைகள், அழுக்குகள், புள்ளிகள் அல்லது கோடுகள் போன்ற குறைபாடுகளிலிருந்து விடுபட்டு, சிறந்த நிறத்தையும் ஒளியையும் மிகுந்த கூர்மையான விளிம்புகளையும் உடைய வைரங்கள் விற்கப்பட்டன. வரிகள், வளைவுகள் மற்றும் கருமை போன்ற குறைபாடுகள் இல்லாத மரகதங்கள் விற்பனையில் இருந்தன. பதுமம், நீலம், விந்தம் மற்றும் படிதம் எனும் நான்கு வகைகளாக மாணிக்கங்கள் வகைப்படுத்தப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. பூனையின் கண் போன்ற தங்கத்தை ஒத்த புஷ்பராக மணிகள் விற்பனைக் கூடத்தில் இருந்தன. கதிரொளியையும் தெளிந்த தேனின் நிறத்தையும் ஒத்த வைடூரிய மணிகள் விற்கப்படுவதற்குக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. மஞ்சள் மற்றும் சிவப்பு நிறங்களின் கலவையிலான கோமேதக மணிகளும் தெளிந்த இருளினைப் போன்ற நீலநிற நீலமணிகளும் விற்கப்பட்டன. அந்நவமணிக்கடை வீதியில், காற்று, மண், கல் மற்றும் நீர் போன்றவற்றாலான குறைகள் கவனமாகத் தூய்மை செய்யப்பட்ட வெள்ளை மற்றும் சிவப்பு முத்துகள் இடம்பெற்றிருந்தன. விரிசல், துளைகள், வளைவுகள் போன்ற குறைபாடுகள் இல்லாத பவள மணிகள் விற்பனைக்கு வைக்கப்பட்டு இருந்தன. இத்தகைய நவமணிகளின் தோற்றம் முதல் சிறப்பு வரையிலான விடயங்களை ஆய்வு செய்து குறைகளைத் நீக்கித் தரப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த வணிகர்கள் குழுமியிருந்த வீதிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மேலும், பகைவர்களின் அச்சுறுத்தல்களிலிருந்து கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் அவற்றைக் கொள்முதல் செய்ய விழைந்து வந்துள்ள பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் ஆகியோருக்குப் பாதுகாப்பை உறுதிசெய்ய கடுமையான நடவடிக்கைகள் செயல்பாட்டில் இருந்ததை அறியமுடிகிறது.

**தங்க** அணிகலன்**களுக்கான** வீதி

சாதரூபம், கிளிச்சிரை, ஆடகம், சாம்பூநதம் ஆகிய நான்கு வகையான தங்கத்திலும் மிகுந்தத் தேர்ச்சியுடைய பொன் வணிகர்கள் நிரம்பிய வீதியாக தங்க அணிகலன்களுக்கான வீதி விவரிக்கப்படுகிறது. இத்தகைய வெவ்வேறு வகையான தங்கத்தாலான அணிகலன்களை வாங்க

விரும்பி வருபவர்களுக்குப் பயன்நல்கும் விதத்தில் அவர்கள் எளிதாகக் கண்டுபிடிப்பதற்காக, வீதி முழுவதும் குறியீட்டு கொடிகள் வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு, இளங்கோவடிகள் நவமணி மற்றும் தங்க அணிகலன்களுக்கான கடை வீதிகளை விவரிப்பதன் வழி, அவற்றைக் குறித்து அவரது நுண்ணறிவு வெளிப்படுவதனாலும் மாணிக்கம் மற்றும் முத்து இடையேயான முரண்பாடாக காப்பியம் படைக்கப்பட்டிருப்பதாலும் நிகண்டுகளில் வணிகர்கள் இளங்கோ என்று குறிப்பிடப்படுவதாலும் 'இளங்கோவடிகள் பொன் மற்றும் நவமணிகளை வணிகம் செய்யும் வணிகர்'[13] என்று தொ.மு.சி. ரகுநாதன் தனது கருத்தை முன்வைத்துள்ளார்.

**உடைகளுக்கானச்** சந்தை

பருத்தி நூல், எலியின் முடி, பட்டுநூல் ஆகியவற்றைக் கொண்டு நுணுக்கமாக நெய்யப்பட்ட உடைகள் (அறுவை) அவற்றின் வகையின் அடிப்படையில் நூறு நூறு அடுக்குகளாக அவ்வீதியில் விற்பனைக்குக் குவிக்கப்பட்டிருந்தன. மேலும், நறுமணம் நிறைந்த புடவைகளை (மடி) விற்கும் அங்காடிகள் அவ்வீதியில் இடம்பெற்றிருந்ததாகக் குறிப்புகள் கூறுகின்றன.

**தானியங்களை** விற்கும் வீதி

நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி, எள்ளு, கொள்ளு, பயறு, உழுந்து, அவரை, கடலை, துவரை, மொச்சை ஆகிய பதினாறு வகையானக் கூலங்களும்[14] மிளகு பொதிகளும் இவ்வீதியில் விற்பனைக்குக் குவிந்திருந்ததாக பொ.வே. சோமசுந்தரனார் தனது உரையில் கூறுகின்றார். இத்தானியங்களின் நிறையைத் துல்லியமாக அளந்து விற்க நிறைக்கோல், பறை, மரக்கால் போன்ற பல்வேறுக் கருவிகள் வணிகர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளன. கால வரம்புகள் இல்லாமல் பொருட்கள் எப்போதும் கிடைக்கும் வண்ணம் தொடர்ச்சியான வணிகம் நடைபெற்றதாக இவ்வீதி விவரிக்கப்படுகிறது.

**சமயம் மற்றும் வணிகம்**

சமணத் துறவிகள் வணிகப் பெருவழிகளின் வழியே பயணித்து இந்தியத் துணைக்கண்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்றடைந்து அந்தந்தப் பகுதிகளில் நிலவிய அரசியல் பண்பாட்டுச் சூழலுக்கு ஏற்பத் தங்களைத் தகவமைத்துக்கொண்டு தங்கள் சமயப் பணிகளை மேற்கொண்டனர். வைதீகத்தை எதிர்த்து வளர்ச்சியுற்ற சமண சமயம், கொல்லாமை, பிறர் பொருளை விழையாமை போன்ற விதிகளை விரதங்களாக கொண்டிருந்தமை செல்வந்தர்களைக் குறிப்பாக வணிகர்களைச் சமணம் நோக்கி ஈர்ப்பதற்கு தூண்டுகோலாக இருந்தன என்பதை கோசாம்பி தனது நூலில் பதிவு செய்கிறார். அதாவது, 'வாய்மை, நீதி, கள்ளாமை, பிறர் பொருளை வவ்வாமை ஆகியவை தனி உடைமை பற்றிய முற்றிலும் புதிதான ஒரு கருத்து தோன்றிவிட்டது என்பதைப் புலப்படுத்துகின்றன.'[15] என்று கூறுகிறார். இவ்வாறு, சமண சமயத்தின் கோட்பாடுகள் வணிகர்களின் நலன்களுக்கு ஏற்றதாக இருந்ததால், வணிகர்கள் பலரும் தங்களைப்

பிரதிநிதித்துவப்படுத்தும் சமயமாக சமணச் சமயத்தினைக் கருதி, அச்சமயத்தில் இணைத்துக்கொண்டனர்.

இங்கு, சமண பௌத்த கதை மரபு குறித்து ந. முத்துமோகன் அவர்கள் முன்வைத்த கருத்தினைக் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது. “சமணரும் பௌத்தரும் முனிவர்கள் மற்றும் அரசர்கள் வரலாற்றைக் கதைகளாக எழுதி வைத்தமைக்கு அவர்களது தத்துவம் சார்ந்த ஒரு காரணம் உண்டு. சமண பௌத்தரின் தத்துவத்தில் வினைக் கோட்பாடு முதலிடம் பெறுகிறது அல்லவா, அந்த வினைக் கோட்பாட்டை நிரூபிக்க எழுதப்பட்டவையே கதைகள்”[16] என்பது அவரது கருத்து. இக்கருத்திலிருந்து, வினைக் கோட்பாட்டை நிறுவிடவே சமணர்கள், இக்காப்பியத்தினைப் படைத்திருப்பினும், அவர்கள் முன்மாதிரியற்ற வகையில் வணிகப் பின்புலம் கொண்டவர்களைத் தலைமைக் கதைமாந்தர்களாகத் தேர்ந்தெடுத்துக்கொண்ட விடயமே இவ்வாய்வுக்கான வினாவாக அமைந்து, அக்காலச் சமூகத்தில் வணிகம் செலுத்திய தாக்கத்தை வெளிப்படுத்திட வழிவகை செய்துள்ளது. இவ்வாறு, வணிகமும் சமண சமயமும் ஒன்றையொன்று ஈர்த்துள்ளன; ஒன்றையொன்று தாக்கத்திற்கு உட்படுத்தியுள்ளன; ஒன்றையொன்று பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளன.

இங்கு, காப்பியத்தின் சமயம் தொடர்பான ஆய்வில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் உள்ளது. காப்பியங்களை ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுங்காப்பியங்கள் என வகைமைப்படுத்தி அவற்றுக்குச் சமய அடையாளம் வழங்கிய செயல்பாடு மிகவும் பிற்காலத்திலேயே நிகழ்ந்துள்ளது. இச்செயல்பாடு காப்பியங்களின் சமயங்கள் குறித்த சிக்கல்களுக்கு வழிவகுத்துள்ளது. சிலப்பதிகாரத்தின் சமய அடையாளமாக சமணம் கருதப்படுகிறது. 'சாவகர், அருகர், ஆசீவகர்'[17] ஆகிய சமயத்தவர்களைக் குறிக்கும் பொதுப்பெயராக சமணர் எனும் பெயர் இருந்துள்ளமையைத் திவாகர நிகண்டு விளக்குகிறது. இங்கு, சாவகம் என்பது உலகாயதத்தைக் குறிக்கிறது. வடமொழியில் சிரமண சமயம் எனப்பட்ட சமணம் குறித்து ர. விஜயலட்சுமி பின்வருமாறு கூறுகிறார். "மெய்வருத்தம் நோக்காது உயிர்கட்கு உய்திதரும் உண்மை நிலைத் தேடி அலைந்த குழுவினரைத்தான் தமிழிலும் சமணர், அமணர் எனத் தொடக்க நிலையில் குறிப்பிட்டிருக்க வேண்டும். காலப்போக்கில் இச்சொற்கள் சமணர்களில் ஒரு குழுவினரான சைனர்களை (Jaina) மாத்திரம் குறிக்கும் சொற்களாயின."[18] வைதீகக் கருத்துகளை எதிர்த்தெழுந்த சிரமணர்கள் இரு கோட்பாட்டின் அடிப்படையில் இயங்கியுள்ளனர். வினைக் கோட்பாட்டை சைனரும் பௌத்தரும் தங்கள் சமயத்தின் அடிப்படைக் கருத்தாகக் கொண்டிருந்தனர். ஊழ் கோட்பாட்டை ஆசீவகர்கள் தங்கள் சமயத்தின் அடிப்படைக் கருத்தாகக் கொண்டிருந்தனர். ‘ஆசீவகக் கொள்கையான ஊழ் கோட்பாடு சிலப்பதிகாரத்தின் கட்டமைப்பில் மிகுந்தப் பங்களிப்பைப் புரிந்துள்ளது’ என்பதான ஆய்வுகளில், 'காப்பியம் படைத்த எண்ணங்கள்' எனும் க. சுப்பிரமணியத்தின் ஆய்வு மற்றும் சிலப்பதிகாரத்தில் இயல்புவாதம், தற்செயலியம், ஊழ் ஆகிய ஆசீவகத்தின் மும்மைக் கொள்கைகள்

தொழிற்பட்டுள்ள விதத்தைக் குறித்த 'சிலப்பதிகாரமும் ஆசீவகமும்' எனும் ஜெ. அரங்கராஜனின் ஆய்வு ஆகியவை குறிப்பிடத்தக்கன. எனினும், ஆசீவகம் குறித்துப் போதியத் தரவுகள் கிடைக்கப்பெறாதபோது நிகழ்த்தப்பட்ட ஆய்வுகள் வழி சைனமே சமணமாக கருதப்படுகிறது. எனவே, சிலப்பதிகாரத்தின் சமய அடையாளம் சமணத்தில் குறிக்கப்படுகின்ற ஆசீவகம், சைனம் ஆகியவற்றில் எது? என்பது தனித்த ஆய்விற்கு உரியது.

**முடிவுரை**

இளங்கோவடிகள் வணிகம் குறித்து நேரடி அனுபவ அறிவினை உடையவர் என்று எண்ணத்தகுந்த வகையில் காப்பியம், வணிகத்திற்குரிய நுண்ணறிவுடன் எழுதப்பட்டுள்ளதையும் காப்பியத்தின் வணிகப் பரிமாணத்தையும் இவ்வாய்வு வெளிக்கொணர்ந்துள்ளது. தமிழகத்தின் பண்டைய புவியியல் அமைவிடம் காரணமாக இங்கு விளைந்த உணவுப்பொருட்கள், தயாரிக்கப்பட்ட கைவினைப் பொருட்கள் ஆகியவற்றைத் தரைவழியாகவும் கடல்வழியாகவும் வணிகம் செய்து, நாட்டை ஆளும் அரசனும் வியந்து அடைந்திட எண்ணும் வகையில் செல்வத்தை ஈட்டிய வணிகர்கள், முடி அணியாத மன்னர்களாக காப்பியம் எழுதப்பட்டக் காலச் சமூகத்தில் செல்வாக்குடன் விளங்கியுள்ளனர் என்பது இவ்வாய்வில் புலப்படுத்தப்பட்டுள்ளது. வினைக் கோட்பாட்டை நிறுவிடவே சமண சமயத்தவர் இக்காப்பியத்தினைப் படைத்திருப்பினும், அவர்கள் முன்மாதிரியற்ற வகையில் வணிகப் பின்புலம் கொண்டவர்களைத் தலைமைக் கதைமாந்தர்களாகத் தேர்ந்தெடுத்துக்கொண்ட விடயத்தை ஆய்வு செய்ததன் வழி, அக்காலச் சமூகத்தில் வணிகம் செலுத்திய தாக்கம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், வணிகமும் சமண சமயமும் ஒன்றையொன்று ஈர்த்துள்ளன; ஒன்றையொன்று தாக்கத்திற்கு உட்படுத்தியுள்ளன; ஒன்றையொன்று பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளன என்பது புலப்படுகிறது. இவ்வாறு, காப்பியம் எனும் இலக்கிய வடிவம் தமிழர்களால் கைக்கொள்ளப்படும்போது, அக்காலப் பொருளாதாரத்திலும் சமூகச் செல்வாக்கிலும் ஆதிக்கம் செலுத்திய வணிகம், தன்னைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலக்கியப் பிரதியாக இக்காப்பியத்தை உருவாக்கியிருக்கக்கூடும் என்பதை உய்த்துணர முடிகிறது. அதாவது, வணிகம் தனது அதிகாரத்தை நிலைநாட்டவும் தொடர்ந்து நிலைபெறச் செய்திடவும் இலக்கியத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தியுள்ளது என்பதை இவ்வாய்விலிருந்து அறிய முடிகிறது.

**குறிப்புகள்**

1. வேங்கடசாமி 2003, ப-69.
2. அடிகள் 15.163-164.
3. ரகுநாதன் 1984, ப-326.
4. அடிகள் 14.21.
5. அடிகள் 15.109.
6. அடிகள் 16.44.

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/kijts05sp042026 

7. அடிகள் 12.64-66
8. அடிகள் 25.165-166.
9. அடிகள் 5. 110-114.
10. அடிகள் 4.35-38.
11. அடிகள் 5.9-27.
12. அடிகள் 14.181-211.
13. சோமசுந்தரனார் 1979, ப-139.
14. ரகுநாதன் 1984, ப-942.
15. Kosambi 1956, p-58.
16. முத்துமோகன் 2023,ப-199.
17. திவாகரர் ப-64.
18. விஜயலட்சுமி1988, ப-9.

**பார்வை நூல்கள்**

[1]. சாமிநாதையர், உ.வே. *சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும்.* டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், 2013.

[2]. சோமசுந்தரனார், பொ.வே. *சிலப்பதிகாரம் மூலமும் உரையும்- பகுதி 1,2,3*. கழக வெளியீடு, 1979. சௌந்தரபாண்டியன், ந. *நாணயவியல்.* அரசு அருங்காட்சியகம், 2011.

[3]. திவாகரர். *திவாகரம்: முதல் தொகுதி.* பிள்ளை, சண்முகம், மு. சுந்தரமூர்த்தி, இ. பதிப்பு. சென்னைப் பல்கலைக் கழகம், 1993.

[4]. முத்துமோகன், ந. இந்தியத் தத்துவங்களும் தமிழின் தடங்களும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2023. ரகுநாதன். *இளங்கோவடிகள் யார்?.* மீனாட்சி புத்தக நிலையம், 1984.

[5]. விஜயலட்சுமி, . *தமிழகத்தில் ஆசீவகர்கள்.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1988.

[6]. வேங்கடசாமி, சீனி, மயிலை. *பழங்காலத் தமிழர்களின் வணிகம்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1978.

[7]. -----. *மயிலை சீனி. வெங்கடசாமி தொகுப்பு நூல்கள்: தொழுதி 2.* மக்கள் வெளியீடு, 2003.

[8]. Kosambi. D. D. *An Introduction to the Study of Indian History*. Popular Book Depot, 1956.

[9]. Padmanabhan, S. *Maritime Trade of the Early Tamils*. Kumaran Publisher, 1990.